வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 29.05.2024 புதன்கிழமை | இதழ் : 150 | பக்கங்கள் : 12




ஜனாதிபதி, பொது தேர்தல்களை

# இரண்டு வருடங்கள் பிற்போட வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

- பொருளாதார மீட்சியின் பின்னர் தேர்தல்
- சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்



கொழும்பு, மே 29

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பிற்போடுவதற்கு பாராளுமன்றில் யோசனை திட்டத்தை முன்வைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இதனை குறிப்பிட்டார்.

11



## ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமல்ல

நாமல் ராஜபக்ஷ பதிவு

கொழும்பு, மே 29

தேர்தல்களை ஒத்திவைப்பது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமானதல்ல என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதினதும் பாராளுமன்றத்தினதும் காலத்தை நீடிப்பது ஜனநாயக சமூகத்தின் அடிப்படை கொள்கையை பாதிக்கும்.

மக்களின் விருப்பத்துக்கு அமைய ஸ்திரதன்மை ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர, மக்களின் குரல்களை தாமதப்படுத்தி ஏற்படுத்தக்கூடாது - என்று அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)



## ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்

நிமல் லான்சா தெரிவிப்பு

கொழும்பு, மே 29

ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு திட்டமிட்டபடி நடத்தப்படும். அதனை ஒத்திவைக்கும் திட்டம் எதுவும் இல்லை என்று ஆளும் தரப்பை சேர்ந்த நிமல் லான்சா எம். பி. தெரிவித்துள்ளார்.

தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விருப்பம் தெரிவித்துள்ளார் என்று லான்சா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அரசமைப்பு சட்டத்தின்படி இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் - என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தேர்தல்களை

11

## சிவில் சமூகமும் இணைந்துள்ளதால் தமிழ் பொது வேட்பாளர் சாத்தியமே!

### விக்னேஸ்வரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 29

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முடியாத நிலைமை முன்னர் கட்சிகளுக்கு இருந்திருக்கலாம். இப்போது, சிவில் சமூகமும் இணைந்துள்ளதால் எம்மால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியும் - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைப்பதும் நல்லது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரன் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு

11

## தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் அரசு மௌனம் காக்கவில்லை!

சிறீதரன் எம். பி தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 29

தமிழ் பொது பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி மௌனம் காக்கவில்லை. நான் உட்பட பலர் வெளிப்படையாக பேசியிருக்கிறோம். எமது கட்சிக்குள் இரு நிலைப்பாடுகள் உள்ளன. மத்திய குழுவிலும் கலந்துரையாடினோம் முடிவு எட்டப்படவில்லை. இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. அறிவித்ததும் முடிவு எடுக்கப்படும் - என்று கூறியுள்ளார் அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

சிறீதரன் எம். பி. நேற்று கிளிநொச்சியிலுள்ள தனது கட்சி பணிமனையில் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார். அதில், செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

11

## ஐ. எஸ். அமைப்புடன் தொடர்பு; சகோதரர்கள் இருவர் கைது!

கொழும்பு, மே 29

இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸூடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் - சிலாபத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள்

11

விடுதியில் துன்புறுத்தல்கள்

## 11 பாடசாலை மாணவிகள் பொலிஸில் தஞ்சமடைந்தனர்!

அருட்சகோதரி ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 29

தீவகத்தில் பாடசாலை ஒன்றின் விடுதியில் தங்கிப் படிக்கும் 11 மாணவிகள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர். தாம் தங்கியுள்ள விடுதிக்கு பொறுப்பான அருட்சகோதரி தங்களை அடித்துத் துன்புறுத்துகிறார்

11



ஈஸ்டர் தாக்குதலில் காயம்:

## சிகிச்சை பெற்றுவந்த பெண் 5 வருடங்களின் பின்னர் மரணம்!

கொழும்பு, மே 29

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் படுகாயமடைந்து கடந்து 5 வருடங்களாக சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்தார்.

திலின ஹர்ஷனி என்ற பெண்ணே நேற்று முன்தினம் இரவு இவ்வாறு உயிரிழந்தார். அவர், சிறீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட பின்னரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி

11

## பாராளுமன்றத் தேர்தல் இவ்வாண்டு அவசியமல்ல!

அமைச்சர் பந்துல சொல்கிறார்

கொழும்பு, மே 29

அரசமைப்பின்படி பாராளுமன்றத் தேர்தலை இந்த வருடம் நடத்துவது அவசியமற்றது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும்

11

## தமிழ் பொது வேட்பாளர் மிகச்சரியான வியூகம்!

முஸ்லிம் கட்சி தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழ் கட்சிகள் மிகச் சரியான வியூகங்களை வகுத்து கச்சிதமாக செயல்படுகின்றன. தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முயற்சிகள் - முன்னெடுப்புகள் ஆரோக்கியமானவை - என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் ஹசன் அலி

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பதை இன்னமும் பகிரங்கமாக அறிவிக்காமல் இருக்கின்ற அதே வேளை, அவரின் கட்சியின் பொதுச் செயலாளரான பாலித ரங்கே பண்டார, நேற்றையதினம் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி, இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்தக்கூடாது என்றும் அப்படி நடத்தாமல் விட்டால்தான் நாடு பொருளாதார ரீதியில் அடைந்துவரும் முன்னேற்றங்களைத் தொடர முடியும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

"யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பதுபோல, தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான சமிக்ஞைதான் இது என்று பலரும் உடனடியாகவே எதிர்வினையாற்றத் தொடங்கிவிட்டனர்.

ரணிலின் நோக்கமும் இப்படி மற்றவர்களின் கவனத்தைத் திசை திருப்புவதுதான் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்னதாக அமைச்சரவை அமைச்சர்களையும், இராஜாங்க அமைச்சர்கள் அனைவரையும் ஒன்றாக சந்தித்திருந்த ஜனாதிபதி, அந்தச் சந்திப்பில் வைத்துத் தான் நிச்சயம் போட்டியிடுவேன் என்பதை உறுதியுடன் தெரிவித்திருக்கிறார்.

அதுமாத்திரமன்றி, கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜனாதிபதித் தேர்தல் உரிய நேரத்தில் நிச்சயம் நடைபெறும் என்றும் அறிவித்திருந்தமை ஈழநாடு வாசகர்கள் செய்திகளில் படித்திருப்பார்கள்.

தேர்தலில் தான் போட்டியிடவிருப்பதை உத்தியோகபூர்வமாக தனது அமைச்சரவை சகாக்களுக்கு அறிவித்துவிட்டு, தேர்தல் நடக்கும் என்பதையும் அமைச்சரவைக்கு அறிவித்து விட்டு, தனது கட்சியின் செயலாளரைக் கொண்டு இரண்டு வருடங்களுக்கு தேர்தல் எதனையும் நடத்தாமல் விட்டால் மாத்திரமே தற்போதைய பொருளாதார முன்னேற்றங்களைத் தொடரமுடியும் என்றும் சொல்ல வைத்திருக்கிறார் ரணில்.

ரணிலை நன்கு தெரிந்துவைத்திருக்கின்ற ஒரு மூத்த சிங்கள ஊடகவியலாளரைத் தொடர்பு கொண்டு, இது எந்த அர்த்தத்தில் சொல்லப்படுகின்றது என்று கேட்டேன்.

அவர் சொன்னார்: "தான் போட்டியிடப் போவதை உத்தியோகபூர்வமாக பொதுவெளியில் அவர் அறிவிக்கவில்லை. என்றாலும், தமது அமைச்சரவை சகாக்கள் அனைவரையும் அழைத்து தான் போட்டியிடவிருப்பதை உறுதியாக அறிவித்திருக்கிறார். இதனை பல அமைச்சர்களும் எனக்கு உறுதிப்படுத்தினார்கள். அப்படியிருக்கையில், இப்போது தனது செயலாளர் மூலம் அவர் சொல்லியிருப்பதை நன்கு கவனியுங்கள். அதாவது தேர்தல் நடந்தால் பொருளாதார முன்னேற்றங்கள் தடைப்பட்டுவிடும் என்பது, தேர்தல் நடப்பதால் அல்ல, அப்படி தேர்தலில் வேறு யாராவது வெற்றிபெற்றால் நாடு மீண்டும் ஒரு நெருக்கடியை சந்திக்கும் என்று சொல்லாமல் சொல்வதற்காக. அதாவது அதுவும் ரணிலின் ஒருவகையான தேர்தல் பிரசாரம்தான். அதனால்தான் சில வாரங்களுக்கு முன்னரும் மத்திய வங்கி ஆளுநரைக் கொண்டும் அந்தச் செய்தியைச் சொன்னார்.

அதாவது தற்போதைய பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடரா விட்டால் மீண்டும் நெருக்கடி வரும் என்றார் மத்திய வங்கி ஆளுநர்.

இன்றைய நிலையில் ரணிலுடன் போட்டியிடவிருப்பவர்கள் என்று நம்பப்படுகின்ற சஜித் பிரேமதாஸவாக இருக்கலாம் அல்லது தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்கவாக இருக்கலாம் இருவருமே ரணிலின் பொருளாதார சீர்திருத்தங்களை குறைகூறிக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் யாராவது ஒருவர் வெற்றி பெற்றால் ரணிலின் பொருளாதார சீர்திருத்தங்களை அவர்கள் தொடரமாட்டர்கள். அப்படி தொடராவிட்டால் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியில் சிக்கும் என்பதையே மத்திய வங்கி ஆளுநர் சூசகமாக தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்போது தேர்தல் நடத்தினால் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று சொல்வதும் ஒருவகையில் ரணில் வெற்றி பெறவில்லை என்றால் நாடு மீண்டும் நெருக்கடிக்கு உள்ளாகும் என்ற மிரட்டல்தான்.

அந்த நண்பரின் விளக்கம் ஆச்சரியத்தைத் தரவில்லை.

"தேர்தல் நடைபெறுமா என்று நீங்கள் கேட்கிறீர்கள், ஆனால், அவர்களின் தேர்தல் பிரசார பணிமனையில் யார் பெரியவர்கள் என்பதில் ஆளை ஆள் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறார்கள்" என்றார் அந்த நண்பர்.

ரணிலின் தேர்தல் பிரசாரத்தை கவனிப்பதற்கென்று அமைக்கப்பட்டுள்ள நவீன வசதிகளுடன் கூடிய பணிமனையில் தலைமைப் பொறுப்பாளராக பிரசன்ன ரணதுங்க நியமிக்கப்பட்டிருக்கிறாராம். அவருக்கு உதவியாக நிமல் லான்சா உட்பட பலர் இருக்கின்றனர். இதேபோல நிதி விசயங்களைக் கையாள சாகல ரத்நாயக்கா நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த இடத்துக்கு கட்சியின் தவிசாளர் வஜிரவும் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றாராம்.

ஆனால், தேர்தல் பிரசார நடவடிக்கைகளை தனது பொறுப்பில் முற்றாகக் கையளிக்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ஷ நெருக்கடி கொடுக்கிறாரெனவும் அந்த பணிமனையில் முக்கிய கூட்டங்கள் நடக்கின்றபோது அழையா விருந்தாளியாக அங்கே நுழையும் அவர் கூட்டத்தில் கலந்துகொள்வதும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றதாம்.

பஸில் இந்த வியடங்களில் தலையிட்டால் தாம் அதிலிருந்து ஒதுங்கி விடப்போவதாக பிரசன்ன, நிமல் குழுவினர் ரணிலிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டனராம். தேர்தல் பிரசாரம் இப்படியெல்லாம் சூடுபிடித்துவிட்ட பின்னர்தான், தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கவேண்டும் என்று ஐ. தே. க. செயலாளர் கருத்துச் சொல்ல, அரசியல் கட்சிகள் எல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு, அதற்கு எதிராக போராட புறப்பட்டுவிட்டன.

போதாக்குறைக்கு நமது தரப்பிலிருந்தும் தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டிருக்கின்றது.

**ஊர்க்குருவி.**




# தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்த யாழ். வணிகர் கழகமும் ஆதரவு!

யாழ்ப்பாணம், மே 29

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவும் - அதுதொடர்பான விழிப்புணர்வில் பங்காற்றவும் யாழ். வணிகர் கழகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் மக்கள், சமூக அமைப்புகளுடனான தொடர்ச்சியான உரையாடலின் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வணிகர் கழகத்துடன் சந்திப்பு நடைபெற்றது.

பொதுவேட்பாளர் விடயத்தில் தொடர்ச்சியான செயல்பாட்டில் இருக்கும் சமூக (சிவில்) அமைப்புகளின் கூட்டிணைவு சார்பாக பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், சட்டத்தரணி சி. அ. யோதிலிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கும் யாழ். வணிகர் சங்கத்தின் தலைவர் செயலாளர் உட்பட்ட முக்கிய உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் யாழ். வணிகர் கழகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது, வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான நோக்கம் அதன் முக்கியத்துவம் தொடர்பாக விரிவாக பேசப்பட்டது.

சந்திப்பின் ஆரம்பத்திலேயே பொது வேட்பாளரின் அவசியத்தை முன்னிறுத்தி அது விரைவாகவும் - வீரியமாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை வணிகர் கழகத்தினர் முன்வைத்திருந்தனர். இது பொதுவேட்பாளர் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியிலும் சமூக நிறுவனங்கள் மத்தியிலும் தன்னியல்பாக தோன்றி ணயுள்ளமையின் வெளிப்பாடு என சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

மேலும், இந்த சந்திப்பில் பொது வேட்பாளர் முன்னெடுப்பில் தொடர்ச்சியாக இயங்கிவரும் சிவில் சமூக அமைப்புகளின் கூட்டிணைவில் யாழ் வணிகர் கழகமும் இணைந்து செயல்படுவதை உறுதிப்படுத்தப்பட்டது. இது தொடர்பான தமது அறிக்கையை முன்வைப்பதாகவும் ஊடகங்கள் ஊடாக தமது உடன்பாட்டையும் இதன் அவசியத்தையும் வெளிப்படுத்தித் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வலுப்படுத்துவதில் பங்காற்றுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தின் முக்கியத்துவம் கருதி வேறு பல சமூக நலன் சார்ந்தும் மக்கள்சார்ந்தும் செயல்படும் அமைப்புகளும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பேச்சி அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம்!

யாழ்ப்பாணம், மே 29

தெல்லிப்பழை கட்டுவன் மேற்கு பொதுக்கிணற்றடி அருள்மிகு பேச்சி அம்மன் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகிறது.

கர்மாரம்ப பூசைகளை தொடர்ந்து முற்பகல் 11 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தமுடியும்.

பின்னர், மாலை 6.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிரதிஷ்டா பிரதம குருக்கள் சிவஸ்ரீ கிருஷ்ண சோதீஸ்வரக் குருக்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 29

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சுக்கிரவார சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார். தொடர்ந்து, சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் க. கயிலைவாசன் "பெரிய புராணத்தின் சிறப்பும் பயனும்" என்னும் விடயப் பொருளில் ஆற்றுவார். (ஐ)

# திருவாசக விழிப்புணர்வு சிறப்பு சொற்பொழிவு!

யாழ்ப்பாணம், மே 29

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவு தொடர் - 07 சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை இளம்சைவப்புலவர் த. மனோஜ்குமார் "மாணிக்கவாசகரும் திருவம்பாவையும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

# வதிரி பூவற்கரை பிள்ளையாருக்கு 1008 சங்காபிஷேகம்

வடமராட்சி, மே 29

வடமராட்சி - வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய மணவாளக்கோல திருவிழாவில் 1008 சங்காபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு விநாயகப் பெருமான் வீதியுலா வந்து பூர்வாங்க கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து - விநாயகர் வழிபாடு, புண்ணியவாசனம், விசேட திரவிய ஹோமம், தீபாரதனை வேத தோத்திர திருமுறை பாராணயம், கும்பபிரதட்சணம் என்பன நடைபெறும்.

மணவாளக்கோல திருவிழாவை ஆலய பிரதமகுரு சிவசிறீ கு. கோகுலன் குருக்கள் பிரதமகுருவாக இருந்து நடத்திவைப்பார். (ஐ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
29.05.2024 புதன்கிழமை
குரோதி வருடம், வைகாசி 16

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் தேசியத்தின் எதிர்காலம்? பிரபாகரனின் அன்றைய நகர்வுகள்

2005 ஜனாதிபதித் தேர்தலின்போது, விடுதலைப் புலிகள் இயக்கம் தேர்தலை பகிஷ்கரித்திருந்தது. இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்க தோற்கடிக்கப்பட்டிருந்தார். இந்த விடயம் தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தனது அபிப்பிராயங்களை தெரிவித்திருக்கின்றார். வாக்களிக்க அனுமதித்திருந்தால் மக்கள் யாருக்கு வாக்களித்திருப்பார்கள் என்னும் கேள்வியை முன்வைத்திருக்கும் அவர், அது ரணில் விக்கிரமசிங்கதான் என்றும் கூறியிருக்கின்றார்.

இதில் எந்த இரகசியமும் இல்லை - ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியைத் தடுக்கும் ஒரே நோக்கத்திற்காகத்தான் புலிகள் தேர்தல் பகிஷ்கரிப்பை கையிலெடுத்தனர். அதன் சரி மற்றும் பிழைகள் தொடர்பில் இப்போது பேச வேண்டியதில்லை. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அன்றைய தீர்மானம் போரியல் விதிகளுக்கு ஊடாகக் கைக்கொள்ளப்பட்ட ஒரு தீர்மானமாகும். அது ஓர் அரசியல் தீர்மானமல்ல. இதுபற்றி போதிய புரிதலில்லாமல் பேசுவது பொருத்தமானதல்ல.

விடுதலைப் புலிகள் ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்தனர் - இதனை உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை - ஆனாலும், தேர்தல் பகிஷ்கரிப்பு நடைபெற்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் - இலங்கையின் ஜனநாயக முறைமையை தங்களுடைய தேவைக்கு ஏற்றவாறு கையாண்டவர்கள் இருக்கின்றார்கள் என்றால் - அது விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும்தான். தேர்தல் பகிஷ்கரிப்பை முன்வைத்தபோது, விடுதலைப் புலிகளிடம் மூன்று விடயங்கள் இருந்தன. ஒன்று, ஒரு பலமான இராணுவ கட்டமைப்பு, இரண்டு, வடக்கு - கிழக்கில் பெரும்பகுதி அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது - மூன்று, அவர்களிடம் ஒரு சமாதான உடன்பாடு இருந்தது, அந்த உடன்பாடு இலங்கைத் தீவில் இரண்டு படைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டிருந்தது. இத்தனையையும் வைத்துக் கொண்டுதான் புலிகள் அந்த முடிவை எடுத்திருந்தனர். இப்போது பகிஷ்கரிப்பு தொடர்பில் பேசுபவர்களிடம் என்ன இருக்கின்றது?

அன்றைய தேர்தல் பகிஷ்கரிப்புக்கு பின்னால் ஒரேயொரு காரணம்தான் இருந்தது - அதாவது, ரணில் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்தால் யுத்தம் செய்ய முடியாது. எனவே, யுத்தம் செய்ய வேண்டும் என்றால் மகிந்த ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டுவர வேண்டும். ஏனெனில், மகிந்த ராஜபக்ஷ மேற்குலகுக்கு எதிரான நிலைப்பாடுடைய ஒருவர். அத்துடன், அவர் நோர்வேயின் சமாதான முன்னெடுப்பு முயற்சியை எதிர்க்கும் ஒருவர். எனவே, அவர் அதிகாரத்தில் அமர்ந்தால், சமாதான ஒப்பந்தம் முறிவடைந்து விடும் - தமிழீழத்துக்கான யுத்தத்தை முன்னெடுப்பதற்கான நியாயமும் பாதுகாக்கப்படும் - இதுதான் புலிகளின் கணக்கு. இந்தக் கணக்கின் அடிப்படையில்தான் புலிகளின் அன்றைய முடிவை அளவிட வேண்டும். இது சரியானதொரு தீர்மானமா அல்லது இல்லையா என்பது தொடர்பில் இப்போது விவாதிப்பதில் பயனில்லை - ஏனெனில், விடுதலைப் புலிகளின் தீர்மானங்கள் அனைத்துக்கும் அவர்கள் பொறுப்பேற்றுவிட்டனர் - ஒரு நிலைப்பாட்டுக்காக மரணிப்பதை விடவும் மேலான பொறுப்புக்கூறல் என்ன இருக்க முடியும்?

அன்று ரணிலை நிராகரித்தமை தொடர்பில் தமிழ் மக்கள் இப்போது வருந்துகின்றார்களா அல்லது இல்லையா என்பதல்ல இப்போதைய பிரச்னை - இன்றைய சூழலில் ரணிலை அல்லது சஜித் பிரேமதாஸவை எதற்காக தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் - அவ்வாறு ஆதரிக்க சொல்பவர்களிடம் உள்ள அரசியல் பிடிமானம் என்ன? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை தேடுவதுதான் இப்போதைக்கு அவசியமான அரசியல் உரையாடலாகும். அதனை விடுத்து, பிரதான விடயங்களை திசைதிருப்பும் நோக்கில் விடயங்களை முன்வைப்பதால் எந்தவொரு பயனும் இல்லை.


விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீர்மானங்களும் அணுகுமுறைகளும் அன்றைய சூழ்நிலையில் எடுக்கப்பட்டவை. அதன் பலாபலன்கள் என்ன என்பது வரலாற்றில் நிறுத்துப் பார்க்கப்படும். ஓர் அரசியல் போக்கின் அடிப்படை என்பது, எடுத்துச் செல்லக் கூடியதை எடுத்துச் செல்வதும் - விட்டுவிட வேண்டியதை விட்டுவிடுவதும்தான். முன்னோக்கிப் பயணிப்பதில் வெற்றிபெற்ற ஒவ்வொரு சமூகமும் இவ்வாறுதான் பயணித்திருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தலைமை இல்லை. ஆனால், கடந்த பதினைந்து வருடகால அரசியலுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அனைவரும் இப்போதும் பதவிகளுக்கான ஏக்கத்துடன்தான் அரசியலில் இருக்கின்றனர். ஆனால், தங்களின் தவறுகள் தொடர்பிலோ - அதற்கான பொறுப்புக்கூறல் தொடர்பிலோ இவர்கள் வேதனையுற்றதில்லை. தங்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியதில்லை. தங்களுடைய தவறுகளுக்காக பொறுப்புக்கூறும் கடப்பாடு தங்களுக்கு இருப்பதாகவும் எண்ணியதில்லை. விடுலைப் புலிகளின் அன்றைய நகர்வுகள் தொடர்பில் பேசும் சுமந்திரன் முதலில் தங்களுடைய கடந்த பதினைந்து வருடங்களை திரும்பிப்பார்க்கும் தற்துணிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# வண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலய பெருந்திருவிழா கொடியுடன் ஆரம்பம்!



படங்கள்: ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம், மே 29

வரலாற்று பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நூற்றுக்கணக்கான பக்தர்களின் அரோஹரா கோஷம் முழங்கி மலர்கள் தூவ கொடியேற்றம் நடைபெற்றது.

பின்னர், வீரமாகாளி அம்பாள் பரிவார மூர்த்திகள் சகிதம் உள்வீதி, வெளிவீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தொடர்ந்து 25 நாட்கள் பெருந்திருவிழா நடைபெறவுள்ளது. இதில், எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும் மறுநாளான 21ஆம் திகதி காலை தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(ஐ)

## விசுவமடுவில் நூல் அறிமுக விழா!


முல்லைத்தீவு, மே 29

எழுத்தாளரும் ஊடகவியலாளருமான அலெக்ஸ் பரந்தாமன் எழுதிய "கடலலைகளை மேவிய கதை" நாவல் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசுவமடு மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் கலாபூஷணம் ந. இராமநாதன் (கோகுலன்) தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வாழ்த்துரைகளை விசுவமடு வாணி மருத்துவ நிலைய மருத்துவர் ந. சிவசுப்பிரமணியம், விசுவமடு திறன்விருத்தி நிலைய இணைப்பாளர் திருமதி றயூலா திருச்செல்வன், நூல் அறிமுக உரையை புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார உத்தியோகத்தர் ச. தனுஜன், நூல் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் யோ. புரட்சி ஆகியோர் வழங்குவர்.

(ஐ)

## கதிர்காமம் யாத்திரீகர்களுக்கு குச்சவெளி ஆலயத்தில் உதவி!



வடமராட்சி, மே 29


வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு சந்நிதியான் - கதிர்காமம் பாத யாத்திரையில் ஈடுபடுவோருக்கு சந்நிதியான் ஆச்சிரமம் மீண்டும் உதவிகளை வழங்கியுள்ளது.

திருகோணமலை - குச்சவெளி தான்தோன்றி சித்தி விநாயகர் ஆலயத்தில் வைத்து யாத்திரீகர்களுக்கு மருந்து மற்றும் உணவுப் பொருட்களை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று நான்காம் கட்டமாக வழங்கி வைத்தார்.

இதன்போது, திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலயத்துக்கு பாதுகாப்பு வேலி அமைப்பதற்காக 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி இரண்டாம் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டது.

(ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். சவால்களில் வெற்றி பெறும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அடங்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். அதிர்ஷ்டம் பெருகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். அதிகாரிகளை பகைத்துக் கொள்ளாதீர்கள். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கடகம்**
உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகள் தருவீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வளைந்து கொடுத்து செல்வீர்கள். உங்களின் புதிய முயற்சிகளை பாராட்டுவார்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். வெற்றி கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உத்தியோகத்தில் அமைதி நிலவும். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
தடைகளைக் கண்டு தளர மாட்டீர்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும்.

**விருட்சிகம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் மீது அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார். தைரியம் கூடும்.

**தனுசு**
இங்கீதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**மகரம்**
சந்திரன் இருப்பதால் மன இறுக்கங்கள் உருவாகும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**கும்பம்**
சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். மேலதிகாரிகளிடம் பிரச்னைகள் வரக்கூடும்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். நினைத்தது நிறைவேறும்.

# பிரதமர் நரேந்திர மோடி கன்னியாகுமரி வருகிறார்

## 3 நாட்கள் தொடர் தியானம் செய்வார்

நாகர்கோவில், மே 29

நாடு முழுவதும் மக்களவை தேர்தல் இறுதி கட்டத்தை நெருங்கி வரும் நிலையில், பிரதமர் மோடி நாளை வியாழக்கிழமை கன்னியாகுமரிக்கு வருகிறார். அங்குள்ள விவேகானந்தர் பாறையில் 3 நாட்கள் தியானம் மேற்கொள்ளவுள்ளார்.

நாடு முழுவதும் மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடந்து வருகிறது. இறுதி கட்ட தேர்தல் வரும் ஜூன் 1ஆம் திகதி நடைபெறவுள்ளது. தேர்தல் முடிவுகள் ஜூன் 4ஆம் திகதி வெளியாகவுள்ளன.

இந்நிலையில், பிரதமர் மோடி நாளை கன்னியாகுமரி வருகிறார். டில்லியில் இருந்து விமானத்தில் கேரள மாநிலம் திருவனந்தபுரம் வரும் அவர், அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் கன்னியாகுமரிக்கு வருகிறார்.

பின்னர் படகு மூலம் கடல் நடுவே உள்ள விவேகானந்தர் பாறைக்கு செல்லும் பிரதமர் மோடி, அன்று மாலை முதல் ஜூன் 1ஆம் திகதி வரை தொடர்ந்து 3 நாட்களுக்கு விவேகானந்தர் மண்டபத்தில் தியானம் மேற்கொள்வார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு கன்னியாகுமரியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# ஜெயலலிதா ஆன்மீகவாதிதான் ஆனால், மதவெறி பிடித்தவரல்ல


## காங்கிரஸின் திருநாவுக்கரசு

சென்னை, மே 29

"ஜெயலலிதா ஆன்மீகவாதிதான் ஆனால் மத வெறி பிடித்தவர் இல்லை. கடவுளை வணங்குபவர்கள் மதவாதிகள் இல்லை" என பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கருத்துக்கு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம். பி. திருநாவுக்கரசர் பதில் அளித்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையகத்தில் நிகழ்வு ஒன்றின் பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தார். இதன்போது,

"கூட்டணிக்கும், அணை கட்டுவதற்கும் சம்பந்தம் இல்லை. கர்நாடகாவில் முன்பு பா. ஜ. க. இருந்தது. என்ன செய்தார்கள்? சட்டரீதியாகதான் பேச



வேண்டுமே தவிர கூட்டணி ரீதியாக பேச வேண்டிய விசயம் இல்லை. இரண்டு முதலமைச்சரும் அமர்ந்து பேசும் விஷயம் இல்லை. அனுமதி இல்லாமல் அணைகள் கட்டப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

ஜெயலலிதா ஆன்மீகவாதிதான். கடவுளை வணங்குபவர். ஆனால், மத வெறி பிடித்தவர் இல்லை. கடவுளை வணங்குபவர்கள் எல்லாம் மத வெறியர்களா? அண்ணாவும் தான், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றார். கலைஞரும் அதையே சொன்னார். மு. க. ஸ்டாலினும் அதையேதான் சொல்கிறார். ஆன்மீக நம்பிக்கை வேறு, மத வெறி வேறு. கடவுளை வணங்குபவர்கள் மதவாதிகள் இல்லை. அண்ணாமலை கருத்துக்கு அ. தி. மு. க. கவினர் பலர் பதில் கூறிவிட்டனர். என்னுடைய கருத்து இதுதான்" - என்றார். (ஐ)


# தமிழக மக்கள் பிரதமருக்கு நன்றியுடையோராக இருப்பர்

## ஆளுநர் ரவி தெரிவிப்பு

சென்னை, மே 29

"செங்கோலை மீட்டெடுத்த தேசம் பெருமிதத்துடன் கொண்டாடுகிறது. செங்கோலை மீண்டும் உயர்ந்த தேசிய பீடத்தில் நிலைநிறுத்திய பிரதமர் மோடிக்கு தமிழ்நாட்டு மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்பார்கள்." என்று தமிழக ஆளுநர் ஆர். என். ரவி தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

புதிய பாராளுமன்றம் திறந்தபோது அங்கு தமிழகத்தின் செங்கோலை நிறுவியது பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு. இந்த நிகழ்வின் ஓராண்டு நிறைவடைந்துள்ளது. இதனை முன்னிட்டு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, ராஜ்



பவன் எக்ஸ்தள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# சென்னை விமான நிலையத்துக்கு மெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல்!

சென்னை, மே 29

சென்னை விமான நிலையத்துக்கு இரு தடவைகள் மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நேற்று முன்தினம் இரவு, நேற்று அதிகாலை என இரு தடவைகள் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது.

மேலும், 5 இடங்களில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளன என்றும் ஒவ்வொன்றாக வெடிக்கும் எனவும் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. எனினும், விசாரணையில் இது போலி மிரட்டல் என்று தெரிய வந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த பொதுத்தேர்தலின்போது பொன்சேகாவுக்கு இடம் இல்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, மே. 29

**அடுத்த பொதுத்தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் அக்கட்சியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வேட்புமனு வழங்கப்படமாட்டாது என தெரியவருகின்றது.**

கட்சியிலிருந்து பொன்சேகாவை விரட்டுவதற்கு சஜித் தயாரானாலும் நீதிமன்றத்தை நாடி, அதற்கு தடை உத்தரவை பொன்சேகா பெற்றுக்கொண்டார். அத்துடன், கட்சியால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளையும் விமர்சித்துவருகின்றார்.

முன்னாள் படை அதிகாரிகள் பலரும் சஜித்துடன் சங்கமித்துவருவதால் பொன்சேகா கடுப்பில் உள்ளார். இந்நிலையில் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குரிய திட்டங்களை அவர் முன்னெடுத்துவருகின்றார் என சஜித் தரப்புக்கு தகவல் கிடைத்துள்ளது.

பொன்சேகாவை சமரசப்படுத்த, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடாக முன்னெடுக்கப்பட்ட முயற்சியும் தோல்வியில் முடிந்துள்ளது. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தன்னை அறிவிக்குமாறு பொன்சேகா அழுத்தம் கொடுத்துவருகின்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே எந்தவொரு தேர்தலிலும் களமிறங்க பொன்சேகாவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இடமளிக்கப்படமாட்டாது என்ற முடிவை சஜித் எடுத்துள்ளார். (அ)

# சாவகச்சேரியில் வாகன விபத்து; இரண்டு இளைஞர்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம், மே. 29

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐயா கடைச் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து ஏ-9 வீதியூடாகச் சென்ற முச்சக்கரவண்டி ஐயா கடைச் சந்திப் பகுதியில் கிளை வீதி ஒன்றிற்குள் திருப்ப முற்பட்டவேளையிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதன்போது அதே திசையில் பின்புறமாக வேகமாக வந்த மோட்டார்சைக்கிள் குறித்த முச்சக்கரவண்டியுடன் மோதியுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படுகாயமடைந்த நிலையில் அப்பகுதி வர்த்தகர்களால் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

கொழும்பு, மே. 29

வாரியபொல வந்துரஸ்ஸ பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வந்துரஸ்ஸ, மாவத்தை ஏரியில் மீன்பிடிக்கச் சென்றவர் வீடு திரும்பாததையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது குறித்த நபரின் சடலம் மாவத்தை ஏரியில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் வந்துரஸ்ஸ கலயாய பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் வைத்தியசாலையில் வைத்து குறித்த நபரின் பிரேதப் பரிசோதனை இடம்பெற்றுள்ள நிலையில் இதன் போது மின்சாரம் தாக்கி அவர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

அதன்படி, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் விலங்கு வேட்டைக்காக போடப்பட்டிருந்த சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி இவர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் வந்துரஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் வாரியபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பணிப்புறக்கணிப்பை ஒத்திவைத்தது சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு

கொழும்பு, மே. 29

நேற்று முன்னெடுக்கவிருந்த பணிப்புறக்கணிப்பை அடுத்த வாரம் வரை ஒத்திவைத்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினது இணை அழைப்பாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் சகல வைத்தியசாலைகளிலும் நேற்றுக் காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு முன்னதாக தீர்மானித்திருந்தது.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக குறித்த தீர்மானத்தை அடுத்த வாரம் வரை ஒத்திவைத்துள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த வாரத்தில் இரண்டு அல்லது ஒரு நாள் முழுநேர பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், இன்று பணிப்புறக்கணிப்பிற்கான திகதி தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் தமக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்களைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்கள் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். (அ)

# இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையரை வழிநடத்தியவர் யார்?

கொழும்பு, மே. 29

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர்கள் என கூறப்படும் 4 இலங்கையர்களையும் இலங்கையிலிருந்து ஒஸ்மன் ஜெராட் என்பவரே வழிநடத்தியுள்ளதாக பாதுகாப்பு பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பான தகவல்களை வழங்கும் நபருக்கு 20 இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒஸ்மன் ஜெராட் எனும் நபர் தனது உருவத்தை மாற்றியிருக்கலாம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

46 வயதான குறித்த சந்தேக நபர் தெமட்டகொடை பிரதேசத்தை சேர்ந்தவர்.

கடந்த 20ஆம் திகதி ஐ.எஸ். ஐ.எஸ். உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் குறித்த 4 இலங்கையர்களும் குஜராத்தின் அகமதாபாத் பிராந்தியத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் இலங்கையின் பாதுகாப்பு பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளில் பல விடயங்கள் வெளிக்கொணரப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான மொஹம்மட் நுஸ்ரத் சிங்கப்பூர், மலேசியா, துபாய் உள்ளிட்ட நாடுகளிலிருந்து தொலைபேசி உபகரணங்கள் மற்றும் மின்சார சாதனங்களை கொண்டு வந்து கொழும்பில் விற்பனை செய்த ஒருவர் என தெரியவந்துள்ளது.

கொழும்பில் தங்கியிருந்த நுஸ்ரத் 2020 செப்ரெம்பர் 16ஆம் திகதி ஹெரோயின் வைத்திருந்ததாக கூறி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஒருவராவார்.

மொஹமட் நப்ரான் இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவின் தலைவரான பொட்டு நௌபரின் மகனாவார்.

அவர் 16 வயதிலிருந்து இந்தியா, டுபாய் உள்ளிட்ட நாடுகளிலிருந்து தனது தாயாருடன் துணிகள் மற்றும் சொக்லேட் உள்ளிட்டவற்றை இலங்கையில் விற்பனை செய்து வந்துள்ளதுடன் 2017ஆம் ஆண்டு இரத்தினம் மற்றும் ஆபரண குற்றச் சாட்டுகள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்டுள்ள ஏனைய 2 உறுப்பினர்களான மொஹம்மட் பாரிஸ் மற்றும் மொஹமட் ரஸ்டீன் ஆகியோர் இந்தியாவிற்கு சென்றுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

மொஹமட் பாரிஸ் புறக்கோட்டையில் கூலித்தொழிலாளியாக பணியாற்றியுள்ளதுடன் கடந்த வருடம் மார்ச் மாதம் 11ஆம் திகதி மற்றும் நவம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 21ஆம் திகதி அவரது நண்பரான ஷமீர் அமீர் என்பவரை குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்திருந்தனர்.

மொஹமட் பாரிஸ் கடந்த 19 ஆம் திகதி இலங்கையிலிருந்து சென்னைக்கு சென்றுள்ளார்.

மொஹமட் ரஸ்டின் முச்சக்கர வண்டி சாரதியாவார்.

அவர் ஐஸ் போதைப்பொருளுடன் தொடர்புடைய ஒருவர் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

2022 செப்ரெம்பர் 16ஆம் திகதி கொழும்பு கரையோர பொலிஸாரால் மொஹமட் ரஸ்டின் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய தேசிய தௌஹீத் ஜமாத் பயங்கரவாத குழுவின் உறுப்பினர்களே இவர்கள் என த ஹிந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

யூதர்கள், கிறிஸ்தவர்கள், பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்கள் மற்றும் கட்சியின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ் அமைப்பை குறி வைக்குமாறு தமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாக கைது செய்யப்பட்டுள்ள 4 இலங்கையர்களும் ஏற்றுக்கொண்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்தன.

பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ. எஸ். தலைவராக செயற்படும் அபு என்பவரின் ஆலோசனைக்கு அமைய இந்தியாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக கைது செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். (அ)

# மிகப் பிரபலமான பயண இடங்களின் பட்டியலில் இலங்கைக்கு 2 ஆம் இடம்!

கொழும்பு, மே. 29

ஆசியாவின் மிகப் பிரபலமான பயண இடங்களின் பட்டியலில் இலங்கை 2 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய ஊடகமான திரைம்ஸ் ஒப் இந்தியா, குறித்த பட்டியலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கலாசார பாரம்பரியம், பசுமையான தேயிலைத் தோட்டங்கள், கடற்கரைகள் மற்றும் வனவிலங்குகளுக்கு புகழ்பெற்ற இடமாக இலங்கை திகழ்வதாக திரைம்ஸ் ஒப் இந்தியா அறிவித்துள்ளது.

குறித்த பட்டியலில், இந்தோனேசியா, தாய்லாந்து, வியட்நாம், இந்தியா, நேபாளம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் தரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டின் நீர்மின் உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு, மே. 29

நாட்டின் நீர்மின் உற்பத்தி 2 மடங்காக அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக மின் உற்பத்தி அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன் தினம் பிரதான நீர்மின் உற்பத்தி நிலையங்களின் ஊடாக 15.66 கிகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இது மொத்த மின் உற்பத்தி விநியோகத்தின் 41.91 சதவீதம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்மின் விநியோகம் அதிகரித்துள்ளமையினால், அனல் மின் உற்பத்தி விநியோகம் 25 சத வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் சட்டத்திற்கான முன்மொழிவுகளை நிறுத்துக!

## மன்னிப்புச் சபை அரசிடம் கோரிக்கை!

கொழும்பு, மே. 29

**புதிய தொழிலாளர் சட்டத்திற்கான தற்போதைய முன் மொழிவுகளை நிறுத்துமாறு சர்வதேச மன்னிப்புச் சபை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தங்கள் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளின் முறையான ஆலோசனைக்குப் பிறகே மேற்கொள்ளப்படவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக் காட்டியுள்ளது.

சர்வதேச தரம் மற்றும் உரிமைகளை அகற்றுவதன் மூலம் தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை பலவீனப்படுத்தும் உத்தேச புதிய சீர்திருத்தங்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாவிட்டால், எதிர்காலத்தில் கடும் எதிர்ப்புகள் உருவாகலாம் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# வங்கி வட்டி விகிதங்கள் மேலும் குறைய வாய்ப்பு

கொழும்பு, மே. 29

வங்கி வட்டி விகிதங்களைக் குறைப்பதற்கு மேலும் வாய்ப்புகள் இருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நேற்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதனை தெரிவித்தார்.

வாடிக்கையாளர்களுக்கு நிதி நிறுவனங்கள் வெகுவிரைவில் குறைப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

இதேவேளை, நிதி நிறுவனங்கள் அந்த பெறுமதிகளை குறைத்துள்ள போதிலும், இலங்கை மத்திய வங்கியின் அளவு குறைக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

மேலும் புதிதாக வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதம் குறைய வேண்டும். தற்போது வழங்கப்பட்ட கடன்களில் செய்ய வேண்டிய மாற்றம் முன்கூட்டியே நடக்கிறது. அதை நாங்கள் கண்காணித்து வருகிறோம். புதிய கடன் வழங்குவதற்கான வாய்ப்புகளையும் நாங்கள் காண்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சர்வதேச தெங்கு சமூகத்தின் 60ஆவது கூட்டம் இலங்கையில்

கொழும்பு, மே. 29

சர்வதேச தெங்கு சமூகத்தின் 60ஆவது கூட்டத்தொடர் மற்றும் அமைச்சர்களின் சந்திப்பை இவ்வாண்டில் இலங்கையில் நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையால் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் தெங்குத் தொழிற்துறையில் தனியார் நிறுவனங்கள் சிலவற்றின் ஒத்துழைப்புடன் குறித்த கூட்டத் தொடர் மற்றும் அமைச்சர்களின் சந்திப்பை இவ்வாண்டில் நவம்பர் மாதம் கொழும்பில் நடத்துவதற்காக விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதன்போது, வெளிநாட்டு செலாவணி ஈட்டலை அதிகரித்தல், உறுப்பு நாடுகளுக்கிடையில் இலங்கையின் தெங்கு தொழிற்துறையை ஊக்குவிப்பதற்கும், தெங்குத் தொழிற்துறையிலுள்ள பிரதான பங்குதாரர்களுக்கிடையில் ஒத்துழைப்புக்களை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்கான விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இடைக்கால ஜனாதிபதியாகவே ரணிலை நாம் தெரிவு செய்தோம்

## கூறுகின்றார் சாகர காரியவசம்

கொழும்பு, மே. 29

இடைக்கால ஜனாதிபதியாகவே ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். பதவி காலம் நிறைவடைந்ததன் பின்னர் இணக்கப்பாடும் முடிவடையும். தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதிக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று குறிப்பிடுவது முட்டாள்தனமான கருத்தாகும். தேசியத்தின் மீது பற்றுள்ளவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இடம்பெறவுள்ள தேர்தல்களை இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளோம். முதலாவது கூட்டத்தை அநுராதபுரத்தில் வெற்றிகரமாக நடத்தினோம். செயற்பாட்டு ரீதியான செயற்பாடுகளில் இனி ஈடுபடுவோம்.

பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஷா எமது கட்சியின்



தலைவரான மஹிந்த ராஜபக்ஷவின் உருவப் படத்தை முன்னிலைப்படுத்தி அரசியலில் ஈடுபட்டார். பொதுஜன பெரமுனவின் உறுப்பினராகவே பாராளுமன்றத்துக்கு தெரிவானார்.

பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷவுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஷாவுக்கும் இடையில் அரசியலுக்கு அப்பாற்பட்ட தொடர்பு காணப்படுகிறது. ஆகவே இவ்விருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில் எவ்வித பிரச்னையும் கிடையாது. பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்கள் அரசியல் ரீதியில் நெருக்கடிக்குள்ளாகியுள் ளார்கள். ஆகவே பிரிந்து சென்றவர்கள் மீண்டும் எம்முடன் ஒன்றிணையலாம்.

இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட நாங்கள் தயாராகவே உள்ளோம். எமது காட்சி சார்பில் போட்டியிட பலர் தயாராகவுள்ளார்கள். அடுத்த மாதம் எமது வேட்பாளரை அறிவிப்போம். பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை அடிப்படையாயக் கொண்ட கூட்டணி ஸ்தாபிக்கப்படும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானவை. முன்னாள் ஜனாதிபதி கோட்டபயவின் இடைக்கால பதவி காலத்துக்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். பதவி காலம் முடிவடைந்ததன் பின்னர் எமது இணக்கப்பாடு நிறைவடையும்.

தேசியத்துக்கும், நாட்டுக்கும் முன்னுரிமை வழங்குபவரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம். தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் அதிகாரத்தை வழங்க வேண்டும் என்ற கருத்து முட்டாள் தனமானது. ஜனநாயகம் தொடர்பில் அடிப்படை அறிவு கூட இல்லாதவர்கள் தான் இவ்வாறான கருத்துக்களை குறிப்பிடுவார்கள்-என்றார். (அ)

# ஜனாதிபதி வீட்டுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் ஆசிரியர் கைது

கொழும்பு, மே. 29

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்துக்கு தீ வைத்த குற்றச்சாட்டின் பேரில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்ற விசாரணைப் பிரிவினர் குறித்த ஆசிரியரை கைது செய்துள்ளனர்.

கிரான்திடிய பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி இந்த தீ வைப்புச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்த நிலையிலேயே தொடர் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்துக்கு தீ மூட்டிய குற்றச்சாட்டில் இதுவரை 25 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# ஓகஸ்ட் மாதத்துக்குள் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 29


மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அரச நிறுவனங்கள் மற்றும் அரச வளங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் ஆணை ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் கிடையாது என சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா முதலில் இடம்பெறும் என மக்கள் மத்தியில் பாரிய சந்தேகம் காணப்படுகிறது. பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையிலும் மக்கள் நம்பிக்கை கொள்வதில்லை. சொல்வதை செய்யும் கலாசாரம் இல்லாத காரணத்தால் அரச நிறுவனங்கள் மீது மக்கள் நம்பிக்கையில்லாமல் இருக்கிறார்கள்.

புதிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்ற [illegible]



பார்ப்பு மக்கள் மத்தியில் காணப்படுகிறது. தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அவசர அவசரமாக சட்டங்களை இயற்றி கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள "பொருளாதார நிலைமாற்றம்" சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்களாணை இல்லாத இந்த அரசாங்கம் எதிர்கால அரசாங் [illegible] கும் வகையில் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலத்தை உருவாக்கியுள்ளது. ஆட்சியில் உள்ள அரசாங்கம் எதிர்கால அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் சட்டங்களை இயற்ற முடியாது. இந்த சட்டமூலத்தில் அவ்வாறான ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

மறுசீரமைப்பு என்று குறிப்பிட்டுக் கொண்டு அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் அதிக அவதானம் செலுத்தியுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. நட்டமடையும்ப்பதற்கு அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு பதிலாக இலாபமடையும் நிறுவனங்களான சிறிலங்கா ரெலிகொம், காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆகியவற்றையும் தனியார் மயப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்களையும், அரச வளங்களையும் தனியார் மயப்படுத்த ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் மக்களாணை கிடையாது. ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அரசியல் கட்சிகள் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது குறித்து மக்களிடம் ஆணை கோர வேண்டும். இடம்பெறவுள்ள தேர்தல்களில் மக்கள் அவதானத்துடன் தீர்மானம் எடுக்கவேண்டும்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் மோ.சைக்கிளுடன் நுழைந்து தாக்குதல்!

## கடமையிலிருந்த உத்தியோகத்தர் காயம்





யாழ்ப்பாணம், மே. 29

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மது போதையுடன் மோட்டார் சைக்கிளுடன் உள்நுழைந்தவரை, கேள்வி கேட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்திய சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இரவு பதிவானது.**

தாக்குதலில் வைத்தியசாலை உத்தியோகத்தர் படுகாயமடைந்ததுடன், தாக்குதலை நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றது.

வாள்வெட்டுத் தாக்குதலால் காயமடைந்த ஒருவரை, உந்துருளியில் ஏற்றியவாறு மதுபோதையில் வந்த நபரொருவர் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்குள் நுழைந்து குறித்த நபருக்கு சிகிச்சையளிக்குமாறு கோரியுள்ளார்.

இதன்போது "ஏன் உந்துருளியில் உள்ளே வந்தீர்கள்" எனக் கேட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர் மீது குறித்த நபர், அலுவலக மேசையில் இருந்த அச்சு இயந்திரத்தால் சரமாரியாகத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு ஒன்றுகூடிய வைத்தியசாலை ஊழியர்கள் குறித்த நபரைப் பிடித்து யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதன்போது காயமடைந்த வைத்தியசாலை உத்தியோகத்தர் மற்றும் வாள்வெட்டில் காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டனர்.

அண்மைக்காலமாக பலர் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பத்தில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், வைத்தியசாலைச் சேவையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது அச்சுறுத்தலுக்குரியது என வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# மரம் முறிந்து விழுந்து பற்றி எரிந்தது வீடு!

கொழும்பு, மே. 29

நுவரெலியாவில் நிலவி வரும் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய மோசமான காலநிலை காரணமாக நுவரெலியா பம்பரகலை பகுதியில் நேற்று காலை வீடு ஒன்றின் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்தமையால் குறித்த வீட்டுக்குச் செல்லும் மின்வயர் அறுந்து விழுந்து வீடு தீப்பிடித்துள்ளது.

இதனால் வீட்டின் உள் பகுதி முழுமையாக எரிந்துள்ளதுடன் இலத்திரனியல் பொருட்கள் உட்பட அதிகமான பொருட்கள் சேதமடைந்துள்ளன.

குறித்த வீட்டில், வசிப்பவர்கள் வெளியில் சென்றிருந்த சமயம் வீட்டின் அருகாமையில் இருந்த மரம் ஒன்று காற்றின் வேகத்தாலும் மழையின் தாக்கத்தாலும் வீட்டின் மேல் விழுந்தமையால் வீட்டிற்கு செல்லும் மின்வயர் அறுந்து விழுந்து ஏற்பட்ட மின்கசிவு காரணமாக திடீரென வீடு தீ பற்றி எரிந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் தீப்பரவலுக்கு மின் ஒழுக்குகே காரணம் எனவும் வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். (அ)

# பலத்த அலையில் சிக்கி கவிழ்ந்த மீன்பிடிப் படகு

## கடற்றொழிலாளர் ஒருவர் சாவு! ஒருவர் மாயம்!!

கொழும்பு, மே. 29

பலப்பிட்டி கடல் பகுதியில் படகு கவிழ்ந்ததில் கடற்றொழிலாளர் ஒருவர் உயிரிழந்ததுடன் ஒருவர் காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த கடற்றொழிலாளர்களின் படகை இயந்திரக் கோளாறு காரணமாக பழுதுபார்த்துக் கொண்டிருந்தபோது பலத்த அலையில் சிக்கி கவிழ்ந்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதன்போது படகில் இருந்த மூன்று பேரும் கடலில் விழுந்துள்ளதுடன், அவர்களில் ஒருவர் நீந்தி கரையை அடைந்துள்ளார்.

இந்நிலையில் ஏனைய இருவரும் கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், ஒருவரின் சடலம் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

பலப்பிட்டிய விஜேராம மாவத்தையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 42 வயதான ஏரல் நிஷாந்த டி சில்வா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.

மேலும், அதே பகுதியைச் சேர்ந்த பிரதீப் டி சில்வா என்பவரே காணாமல் போயுள்ளார்.

அவரை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. (அ)

# "அவுரா லங்கா" நிறுவனத்தின் தலைவரிடம் 30 கோடி ரூபா கப்பம் கோரிய சி.ஐ.டியினர்?

கொழும்பு, மே. 29

ஹெலிகொப்டர் ஒன்றை வாங்குவதாக கூறி வாங்கிய ஏழு கோடி ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட "அவுரா லங்கா" நிறுவனத்தின் தலைவர் விரஞ்சித் தாம்புகலவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இதற்கு முன்னர் 30 கோடி ரூபாயை இலஞ்சமாக கோரியுள்ளதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி உபாலி ஜயமான்ன கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திராஜாவிடம் அறிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மற்றும் தற்போதைய அதிகாரிகள் தமது கட்சிக்காரரிடம் கப்பம் கோருவதாகவும், இது தொடர்பில் இரகசிய வாக்குமூலமொன்றை வழங்குவதற்கு அனுமதி கோரியதாகவும் சட்டத்தரணி உபாலி ஜயமான்ன தெரிவித்தார்.

ஹெலிகொப்டர் வாங்குவதாக கூறி 07 கோடி ரூபாய் மோசடி செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட விரஞ்சித் தாம்புகல, ஐ.டபிள்யூ.எஸ் ஹோல்டிங் நிறுவனத்தின் முறைப்பாட்டின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான முறைப்பாடு அழைக்கப்பட்டபோது, சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை எனத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான நிதிக் கொடுக்கல் வாங்கல் சிவில் கொடுக்கல் வாங்கல் எனவும், இந்தச் சம்பவத்தில் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லை எனவும் சந்தேகநபரான "அவுரா லங்கா" நிறுவனத்தின் தலைவர் விரஞ்சித் தம்புகல சார்பில் ஆஜரான சட்டத்தரணி உபாலி ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த உபாலி ஜயமான்ன, இந்த சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனது கட்சிக்காரருக்கு எவ்வித நிபந்தனைகளின் கீழும் பிணை வழங்கப்படவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபரை தலா இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# காசா சிறுவர் நிதியத்திற்கு இதுவரை 127 மில்லியன் ரூபா நன்கொடை!

கொழும்பு, மே. 29

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக்கருவின்படி **2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்திற்கு இலங்கை நன்கொடையாளர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்களினால் இன்றுவரை 127 மில்லியன் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.**

காஸாவில் காணப்படும் யுத்த சூழ்நிலை காரணமாக அப்பகுதியில் சிக்கியுள்ள சுமார் ஒரு மில்லியன் சிறுவர்களின் அவலநிலை, குறிப்பாக தண்ணீர், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் இன்மை காரணமாக அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிரமங்களைக் கருத்தில் கொண்டு, அவர்களின் அத்தியாவசிய செலவுகளை ஈடுகட்ட மனிதாபிமான உதவி வழங்குவதற்காக நிதியமொன்றை ஆரம்பிக்க அமைச்சரவை தீர்மானித்தது.

அதற்கமைய காஸாவிலுள்ள சிறுவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக நிதியமொன்றை ஆரம்பிப்பதற்காக, கடந்த இப்தார் கொண்டாட்டத்திற்காக ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் அரச நிறுவனங்கள் என்பவற்றினால் ஒதுக்கப்பட்ட ஒரு மில்லியன் ரூபா நிதி முதற்கட்டமாக ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் பணி முகவர் நிறுவனத்தின் ஊடாக 04-01-2024 ஆம் திகதி பாலஸ்தீன அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நன்கொடைக்கு மேலதிகமாக, காஸா சிறுவர் நிதியத்திற்கு பங்களிக்குமாறு வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடம் விடுத்த வேண்டுகோளுடன் இலங்கையின் நன்கொடையாளர்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் என்பன கைகோர்த்தன.

இதன்படி, காஸா பகுதியில் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகும் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அந்த நிதி எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணி முகவர் அமைப்பிடம் வழங்கப்பட உள்ளது.

மேலும், பல்வேறு தரப்பினரும் முன்வைத்த கோரிக்கைகளை கருத்தில் கொண்டு மே 31ஆம் திகதி வரை இதற்காக பொதுமக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளிடம் இருந்து நன்கொடைகள் பெறப்பட்டு, மேற்கண்ட தொகையுடன், அதுவரை பெறப்பட்ட முழு நன்கொடைகளும் துரிதமாக ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் பணிகள் முகவர் நிறுவனத்திற்கு வழங்கப்படும் என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரமாக்கப்பட்டுள்ள வினைத்திறன்காண் பரீட்சை

## தொழிற்சங்கம் கவலை

நிந்தவூர், மே. 29

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை வியாபாரமாக்கப்பட்ட நிலையிலுள்ள தாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.**

தொழில் ரீதியாக தகுதி வாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்ட தாரிகளின் தொழிற் சங்கம், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத் துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண் டவாறு கவலை தெரிவித்துள் ளது.

தொழிற்சங்கம் சார்பில் சங் கப் பொதுச் செயலாளர் எம். ஹூசைன் முபாரக் இந்த மக ஜரை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தடை தாண்டல் பரீட்சை நடத்தப்படுவதனால் அபிவி ருத்தி உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற அறிவு ரீதியான மாற்றத்தை விட வகுப் புக்களாக மாற்றப்படுவதனூடாக அவர்களின் திறமை மட்டுமன்றி, அவர்களது செயல் ரீதியான அனுபவத்தை வளர்ப்பதன் மூலம் அவர்களிடமிருந்து வினைத்திறனான சேவையை அவர்கள் சார்ந்த துறையினூ டாக பெற முடியும் எனவும் மகஜரில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

நீங்கள் இந்த நாட்டுக்கு அய ராது ஆற்றிவருகின்ற சேவையா னது மக்களால் என்றும் மறக்க முடியாத ஓர் உன்னத சேவை யாக எங்களது தொழிற்சங்கம் கருதுகின்றது.

எமது நாட்டில் ஒரு இலட் சத்துக்கு மேற்பட்ட அபிவி ருத்தி உத்தியோகத்தர்கள் சேவை யாற்றி வருகின்றார்கள் இருந்தா லும் அவர்களுக்கு நடாத்தப்படு கின்ற வினைத்திறன்கான் தடை தாண்டல் பரீட்சையானது தற் பொழுது வியாபாரமாக்கப்பட்டு வகுப்புக்களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. மேலும் வினைத் திறன் பரீட்சையை நோக்காகக் கொண்டு ஒரு நபரிடம் ஒரு மணித்தியாலத்திற்கு 500 ரூபா அறவிடப்படுவது ஒரு கவலை யான விடயமாகும். அது மாத்தி ரமன்றி சூம் ஊடாக நடத்தப்ப டுகின்ற வகுப்புக்களுக்கு 3000 ரூபாவுக்கு மேற்பட்ட கட்ட ணங்கள் அறவிடப்படுகின்றன. இது அரச ஊழியர்களை பொரு ளாதார ரீதியில் மிகவும் கஷ்ட மான நிலைக்குள் உள்ளாக்கியி ருக்கின்றது.

ஆனால் ஆசிரியர்களுக்கு இவ்வாறான தடைதாண்டல் பரீட்சை இல்லாமலாக்கப்பட்டு சிறந்த விரிவுரையாளர்களைக் கொண்டு வகுப்புக்களாக மாற் றப்பட்டு நடாத்தப்பட்டு வரு கின்றது. இது ஒரு சிறந்த முறை யாக எங்களுடைய தொழிற்சங் கம் கருதுகின்றது.

மேலும் தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்படுவதனால் அபிவிருத்தி உத்தியோகத்தர்க ளுக்கு கிடைக்கப்பெறுகின்ற அறிவு ரீதியான மாற்றத்தைவிட வகுப்புக்களாக மாற்றப்படுவத னூடாக அவர்களின் திறமை மட்டுமன்றி அவர்களின் செயல் ரீதியான அனுபவத்தை வளர்ப் பதன் மூலம் அவர்களிடமிருந்து வினைத்திறனான சேவையை அவர்கள் துறையினூடாக பெற் றுக்கொள்ள முடியும் என்பதை தங்களின் தொழிற்சங்கம் மேலான ஆலோசனையாக முன்வைக் கின்றது.

அதுமட்டுமல்லாது அண் மையில் மாற்றப்பட்டு செயற் படுத்தப்பட்டு வருகின்ற சிங்கள பாடத்துக்கான செயற்பாட்டு வகுப்புக்கள் மிகவும் பிரயோச னமானதாக அமைந்து இருப்ப தாக அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் கருதுகின்றார்கள்.

ஆகவே இவ்வாறான நடை முறையைப் பயன்படுத்தி நாட் டில் காணப்படுகின்ற அபிவி ருத்தி உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன்காண் பரீட்சை மாற்றப்பட்டு பொருத்தமான நடைமுறைசார் வகுப்புக்களாக செயற்படுத்த தாங்கள் ஆவனை செய்யுமாறு எங்களின் தொழிற் சங்கம் அன்பாய் கேட்டுக்கொள் கின்றது.-எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(அ-06)



# இலங்கை மக்கள் காங்கிரஸுடன் இணைகின்றார் றிஸ்லி முஸ்தபா

நிந்தவூர், மே. 29

கிழக்கிலங்கையின் சிரேஷ்ட முஸ்லிம் அரசியல் வாதியும், முன்னாள் உயர்கல்வி பிரதி அமைச்சருமான காலஞ்சென்ற மர்ஹூம் மயோன் முஸ்தபா வின் புதல்வரும், சமூக செயற் பாட்டாளருமான றிஸ்லி முஸ் தபா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் இணைந்து கொள்கின்றார்.

பாமர மக்களின் உற்ற தோழ னாகவும், அரசியல் நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்ந்த சிரேஷ்ட அரசியல்வாதியான தமது தந்தை மயோன் முஸ்தபா வின் வழியே அரசியலில்புகும் நோக்குடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் றிஸ்லி முஸ்தபா இணைந்து பயணிக் கும் தீர்மானத்தை எடுத்துள் ளார்.

இதனடிப்படையில், இளம் சமூக அரசியல் செயற்பாட்டா ளரான றிஸ்லி முஸ்தபா, அகில இலங்கை மக்கள் காங்கிரசுடன் இணைந்து கொள்ளும் சிறப்பு விழா ஒன்று சாய்ந்தமருது பாவா நோயலி வரவேற்பு மண் டபத்தில் நடைபெற விருக்கின் றது.

தென் கிழக்கு பல்கலைக்க ழக வர்த்தக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளரும் (தகவல் தொழில் நுட்பம்) றிஸ்லி முஸ்தபா கல்வித்திட்ட பிரதித் தலைவருமான கலாநிதி ஏ.எல்.எம்.ஜயூப்கான் தலைமை யில், எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்படி இணைவு தொடர்பான சிறப்பு விழா நடைபெறவிருக்கின்றது.

விழாவில், முன்னாள் அமைச் சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரு மான றிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள வுள்ளார்.

இந்த சிறப்பு நிகழ்வின் போது றிஸ்லி முஸ்தபா அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியுடன் உத்தியோகபூர்வமாக இணைந் துகொள்வார்.

(அ-06)

# கல்முனை மாநகர சபையினரால் கடற்கரைப் பிரதேசம் சுத்திகரிப்பு

கல்முனை, மே. 29

கிழக்கு மாகாணத்திலுள்ள கடற்கரைப் பிரதேசங்களை சுத்தப்படுத்தி தூய்மையாக்கி அழகுபடுத்தும் பொருட்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந் தில் தொண்டமானின் கருத் திட்டத்திற்கமைவாக கல்முனை மாநகர சபை ஒழுங்கு செய்தி ருந்த கடற்கரை சுத்திகரிப்பு வேலைத் திட்டம் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல். எம். அஸ்மி தலைமையில் முன் னெடுக்கப்பட்டது.

மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி, வேலைகள் அத்தியட் சகர் வி.உதயகுமரன் ஆகியோ ரின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இப்பணிகளில் சுகாதார மற்றும் பொறியியல் வேலைப் பிரிவுகளின் மேற்பார்வையாளர் களும் ஊழியர்களும் பங்கேற்றி ருந்தனர்.

(அ)



# சந்நிதி-கதிர்காம பாத யாத்திரைக் குழுவினர் இன்று கோபாலபுரத்தில் நாளை திருமலையில்


காரைதீவு, மே. 29

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் சந்நிதி- கதிர்காம ஜெயாவேல்சாமி தலைமையி லான பாதயாத்திரை குழுவினர் நேற்று கும்புறுப்பிட்டியை வந்தடைந்தார்கள்.

இன்று புதன்கிழமை கோபா லபுரத்தில் தரித்து நிலாவெளி யில் தங்குவார்கள். அங்கு கோபா லபுரத்தைச் சேர்ந்த சுவிட்சர் லாந்தில் வாழும் ஆசிரியை திரு மதி விஜயகுமாரி விக்னேஸ்வ ரன் அனுசரணை வழங்கவுள் ளார்.

நாளை திருகோணமலை நகரை வந்தடைவார்கள்.

கடந்த 11ஆம் திகதி யாழ்ப் பாணம் செல்வச்சந்நிதி ஆலயத் தில் இருந்து ஆரம்பித்த இந்த பாதயாத்திரை நேற்று 18ஆவது தினமாக சிறப்பாக இடம்பெற் றுக் கொண்டிருக்கின்றது.



கதிர்காம பாதயாத்திரை பேரவையின் தலைவர் ஜெயா வேல்சாமி தலைமையில் இந்த குழுவினர் வந்து கொண்டிருக் கின்றார்கள் .

மொத்தமாக 124 அடியார் கள் இந்த பாதயாத்திரை குழு வில் இடம் பெற்றிருக்கிறார் கள்.

(அ)

# கிழக்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனத்துக்கு கல்முனை மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை

கல்முனை, மே. 29

நேற்று இடம்பெறவிருந்த கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான தெரிவுப்பட்டியல் முன்னரே வெளியாகியிருந்த நிலையில் அதில் பல அப்பட்டமான முறை கேடுகள் இருப்பதாக கூறி அநீ தியிழைக்கப்பட்ட பல பட்ட தாரிகள் தமக்கான நீதியினை பெற்றுத்தருமாறு குரல்கள் இயக்கத்திடம் வேண்டியிருந்த னர். உடனடியாக செயற்பட்டிருந்த குரல்கள் இயக்கம் துரித கதியில் செயற் பட்டு பாதிக்கப்பட்டவர்களுக் காக தனது சட்டத்தரணிகள் ஊடாக கல்முனை மேல் நீதி மன்றில் "ரிட்" வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தது.

நேற்று முன் தினம் கல்முனை மேல் நீதிமன்றில் இவ்வழக்கு அழைக்கப்பட்ட வேளையில் குரல்கள் இயக்க சட்டத்தரணி கள் றாஸி முகம்மட், ஏ.எல். ஆஸாத், எப்.எச்.ஏ.அம்ஜாட், ஏ.எம்.சாதிர், எம்.எம்.ஏ. சுபாயிர் ஆகியோர பாதிக்கபட்ட பட் டதாரிகள் சார்பாக் ஆஜராகி தம்பக்க வாதங்களை முன்வைத் திருந்தனர். குறித்த வாதங்களின் நியாயத்தன்மையினை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் நேற்று இடம்பெறவிருந்த கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்லைன் மூலம் பாலியல் சுரண்டல்

# ஒரு வருடத்தில் மட்டும் 30 கோடி சிறார் பாதிப்பு

நியூயோர்க், மே 29

**ஒன்லைன் மூலமாக ஒரு வருடத்தில் 30 கோடிக்கும் அதிகமான சிறுவர்கள் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர் என்று அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.**

ஸ்கொட்லாந்தின் எடின் பேர்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 12 மாதங்களில் உலகில் உள்ள சிறுவர்களில் 8 இல் ஒருவர் ஒன்லைன் மூலம் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

சிறுவர்களை கட்டாயப்படுத்தி ஆபாச காணொலி எடுத்து இணையத்தில் பகிர்தல், ஆபாச உரையாடல் (செக்ஸ்டிங்), பாலியல் சார் செயல்களை செய்வித்தல் - செய்யத் தூண்டுதல் செயற்கை நுண்ணறிவு மூலமாக உருவாக்கப்பட்ட படங்களை வைத்து மிரட்டி தமது பேச்சுக்கு இணங்க செய்தல் போன்ற பல குற்றங்கள் சிறுவர், சிறுமியர்களுக்கு எதிராக ஒன்லைன் மூலம் இழைக்கப்படுகின்றன.


மோசடியாளர்கள் பெரும்பாலும் இளைஞர்கள் போல காட்டிக்கொண்டு சமூக வலைதளங்கள் மூலம் சிறுவர், சிறுமியரை ஏமாற்றுகின்றனர்.

உலகம் முழுவதும் இந்த வகை குற்றங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

முக்கியமாக உலகின் பெரும் சக்திவாய்ந்த நாடான அமெரிக்காவில் அதிகமாக இந்த குற்றங்கள் நடந்துவருகின்றன என்று ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இந்தப் பிரச்னை உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கொடூர தாக்குதலை உடன் நிறுத்தவேண்டும்!

## ஐ. நா. சபை வலியுறுத்து





நியூயோர்க், மே 29

"கொடூர தாக்குதலை உடனே இஸ்ரேல் நிறுத்த வேண்டும்", என்று ஐ. நா. சபை தெரிவித்துள்ளது.

ரபா நகரத்தின்மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 45 பேர் உயிரிழந்தனர். இதனை கண்டித்து ஐ. நா. பொதுச் செயலர் அன்ரனியோ குட்டெரஸ்ட் பதவிட்டுள்ள பதிவிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், "இந்தக் கொடிய மோதலில் இருந்து தஞ்சம் தேடிவந்த ஏராளமான அப்பாவி பொதுமக்களை கொன்ற இஸ்ரேலின் நடவடிக்கைகளை நான் கண்டிக்கிறேன். காசாவில் பாதுகாப்பான இடம் இல்லை. இந்தக் கொடூர தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும்", என்றும் கூறினார். (ஐ)

# ரபா நகரம் மீது தாக்குதல் சிறார் உட்பட 45 பேர் பலி!



காசா, மே 29

தெற்கு காசாவின் ரபா நகரத்தில் தற்காலிக முகாம்கள் மீது இஸ்ரேல் படைகள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 45 பேர் உயிரிழந்தனர். மேலும், 249 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சர்வதேச அளவில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியதால் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன அதிகாரிகளின் கூற்றுப்படி,

ஜபாலியா, நுசிராத் மற்றும் காசா நகரம் உள்ளிட்ட பிற பகுதிகளில் இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்கள் தங்கியிருந்த தங்குமிடங்களை இஸ்ரேலிய படைகள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியதில் பலர் உயிரிழந்தனர். ஹமாஸ் போராளிகளை குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

2023 ஒக்ரோபர் 7 முதல் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 81,026 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், ஹமாஸ் அமைப்பினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (ஐ)

# ரபாமீதான தாக்குதல் துரதிர்ஷ்டவசமான தவறு

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு



ஜெருசலேம், மே 29


ரபாமீது தாக்குதல் நடத்தப்பட்டது துரதிர்ஷ்டவசமான தவறு என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ரபா நகரத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 35 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு பல தரப்பினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தாம் உத்தரவிட்டுள்ளார் என்றும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காசாமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்காவில் புயல் 19 பேர் பலி; பலர் காயம்!



வாஷிங்டன், மே 29

அமெரிக்காவின் ரெக்சாஸ், ஒக்லஹோமா, ஓர்கன்சாஸ் மாகாணங்களில் வீசிய புயலால் 19 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீடுகள் இடிந்தும், மரங்கள் வீழ்ந்துமே இந்த மரணங்கள், காயங்கள் நிகழ்ந்தன என்று தெரிவிக்கப்பட்டது. இதேநேரம் கட்டட இடிபாடுகளில் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புயல் வீசும் என்பது முற்கூட்டியே அறிவிக்கப்பட்டதால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனால், சுமார் 5 இலட்சம் மக்கள் மின்சாரம் இன்றி பாதிக்கப்பட்டனர். அந்த மாகாணங்களில் இயல்புநிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது. (ஐ)

# பப்புவாநியூகினியா நிலச்சரிவு 2 ஆயிரம் பேருக்கு மேல் பலி!



போர்ட்மோர்ஸ்பி, மே 29

பப்புவாநியூகினியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புதையுண்டு உயிரிழந்தனர் என்று அந்த நாடு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான பப்புவாநியூகினியாவில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கி 670 பேர் உயிரிழந்தனர் என்று முன்னர் தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்று பப்புவாநியூகினியா அரசு ஐ. நாவுக்கு தெரிவித்துள்ளது.

ஆயிரத்து 200 வீடுகள் சேதமடைந்தன என்றும் அதிகாலை வேளை மக்கள் நித்திரையில் இருந்த சமயம் நிலச்சரிவு ஏற்பட்டதால் பலர் உயிரிழந்தனர் என்று அந்த அரசு தெரிவித்தது.

இதேநேரம், பப்புவா நியூகினியாவுக்கு உதவத் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன. (ஐ)

# 2,300 ஆண்டுகள் பழமையான மோதிரம் ஜெருசலேமில் மீட்பு



ஜெருசலேம், மே 29

இஸ்ரேலின் ஜெருசலேமில் சுமார் 2 ஆயிரத்து 300 ஆண்டுகள் பழமையான தங்க மோதிரம் கண்டுபிடிக்கப்பட்டதாக தொல்பொருள் ஆணையம் தெரிவித்துள்ளது.

விலை உயர்ந்த சிவப்பு கல் பதிக்கப்பட்டு இந்த தங்க மோதிரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது

இதன்மூலம் ஜெருசலேமில் வாழ்ந்த பண்டைய கால மக்கள் குறிப்பிடத்தக்க செல்வாக்குடனும், செழிப்புடனும் இருந்தமையை இந்த மோதிரம் உணர்த்துவதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பள முரண்பாடுகளை ஆராய்வதற்கு விசேட குழு!

## அமைக்க அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, மே. 29

**அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்கு விசேட குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச சேவையின் பல துறைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நீக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான உடனடி தீர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி அமைச்சரவைக்கு பரிந்துரைத்திருந்தார்.

இதன்படி, ஒவ்வொரு துறையிலும் நிலவும் சம்பள முரண்பாடுகளை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை பரிந்துரைப்பதற்கு குழுவொன்றை நியமிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ளதுடன், பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகளைக் கொண்ட உரிய குழுவை விரைவில் நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

## பிரான்ஸ் சென்றுள்ள அமைச்சர் அமரவீர



கொழும்பு, மே. 29

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகருக்குச் சென்று, விலங்குகள் ஆரோக்கியத்திற்கான உலக அமைப்பின் 100ஆவது நினைவேந்தல் நிகழ்வில் பங்குபற்றினார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமலி கொத்தலாவல உள்ளிட்ட குழுவினரும் குறித்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

உலக விலங்கு சுகாதார அமைப்பின் இயக்குநர் அழைப்பின் பேரில், அமைச்சர் மற்றும் பிரதிநிதிகள் அமைச்சர் மாநாட்டில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கொழும்பில் ஆபத்து நிறைந்த மரங்களை அகற்ற நடவடிக்கை

கொழும்பு, மே. 29

கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிக ஆபத்துள்ள மரங்களை வெட்டி அகற்றும் விசேட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அதிக ஆபத்துள்ள மரங்களை அகற்றுவதற்காக இராணுவம் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பு மாநகர சபையின் பூரண மேற்பார்வையின் கீழ் மரங்களை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அகற்றப்பட்ட மரங்களுக்கு பதிலாக புதிய மரங்களை நடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக மரங்கள் முறிந்து வீழ்ந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தரவுகளின்படி 20 மாவட்டங்களின் 212 பிரதேச செயலகப் பிரிவுகளில் 14 ஆயிரத்து 754 குடும்பங்களைச் சேர்ந்த 55 ஆயிரத்து 406 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் மேலும் கூறினார். (அ)

# 1700 ரூபா சம்பள அதிகரிப்பை அடுத்த மாதம் முதல் வழங்குக!

## தோட்ட முதலாளிமார்களுக்கு மனுஷ நாணயக்கார உத்தரவு

கொழும்பு, மே. 29

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளத்தை 1,700 ரூபாயாக அதிகரிப்பதற்கான தீர்மானத்தை அனைத்து தோட்ட முதலாளிமார்களும் அடுத்த மாதம் முதல் நடைமுறைப்படுத்த வேண்டும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, உரிய சம்பளத்தை வழங்காத தோட்டங்கள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு முறையானவர்களிடம் கையளிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.



சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் ஏற்கனவே குறைந்தபட்ச சம்பளத்தை விட அதிகமாக சம்பளத்தை செலுத்தி வருவதாகவும், அரசாங்கத்திடம் இருந்து தனியாருக்கு மாற்றப்பட்ட உள்ளூர் தோட்ட நிறுவனங்களில் இந்த சம்பளத்தை அதிகரிப்பதில் சிக்கல் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறைந்தபட்ச சம்பளத்தை அமுல்படுத்தாத தோட்ட நிறுவனங்களை கையகப்படுத்தி அவற்றை உரிய முறையில் நடைமுறைப்படுத்தக் கூடியவர்களுக்கு வழங்குவதற்கான அடிப்படைச் சட்டத்தை தயார் செய்ய ஜனாதிபதி அமைச்சரவையில் தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே அடுத்த மாதம் முதல் உயர்த்தப்பட்ட சம்பளத்தை வழங்க முடிவு செய்துள்ளதாகவும் இல்லையெனில், சட்டத்தை அமல்படுத்த தொழில் திணைக்களத்துக்கு அதிகாரம் உள்ளதாகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (அ)

# சிறிலங்கன் விமான சேவையை சீரமைக்க 3 நிறுவனங்கள் தயார்!

கொழும்பு, மே. 29

சிறிலங்கன் விமான சேவையை மறுசீரமைக்க மூன்று நிறுவனங்கள் முன்வரவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவற்றில் 2 வெளிநாட்டு நிறுவனங்கள் என்றும், எஞ்சியது உள்ளூர் நிறுவனம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்

இதில் ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு சிறிலங்கன் விமான சேவையை மறுசீரமைக்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.



தற்போது முன்வைக்கப்பட்ட நிறுவனங்களின் நிபந்தனைகளை ஆராய்ந்து பொருத்தமான நிறுவனத்தைத் தெரிவு செய்யும் பணிகளில் விலைமனுக்கோரல் சபையினால் ஈடுபட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மேலும் சிறிலங்கன் எயார் லைன்ஸ் முதலீட்டுக்கான விலைமனுக்களை சமர்ப்பிக்க வழங்கப்பட்ட கால அவகாசம் மார்ச் 5 ஆம் திகதியுடன் முடிவடைந்ததுடன், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அதனை மேலும் 45 நாட்களுக்கு நீடிக்க ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடும் காற்று மற்றும் கடல் சீற்றம் தொடர்பாக சிவப்பு எச்சரிக்கை!

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
DEPARTMENT OF METEOROLOGY
ශ්‍රී ලංකාව இலங்கை SRI LANKA

கொழும்பு, மே. 29

பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் காரணமாக வானிலை ஆய்வு மையம் சிவப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அதன்படி நேற்று காலை 10.30 மணியளவில் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பு அடுத்த 24 மணிநேரத்துக்கு செல்லுபடியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசுவதுடன், அப்பிரதேசத்தின் கடற்பகுதி மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மீனவர் மற்றும் கடற்பயண சமூகத்தினர் மறு அறிவித்தல் வரை இந்த கடற்பரப்பில் பயணிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான ஏனைய கடற்பரப்புகளில் கடல் அலையின் உயரம் 2.5 - 3 மீற்றர் வரை உயரலாம் என அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் கல்பிட்டி, கொழும்பு, காலி முதல் மாத்தறை வரை கடல் அலைகள் நிலத்தை நோக்கி வருவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கையடக்க தொலைபேசியினால் பறிபோனது உயிர்

கொழும்பு, மே. 29

கட்டுகுருந்த மற்றும் களுத்துறை ரயில் நிலையங்களுக்கு இடையில் கையடக்கத் தொலைபேசியில் ஹாண்ட்-ஃப்ரீயை இணைத்துக்கொண்டு ரயில் பாதையில் பயணித்த இளைஞர் ஒருவர் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் களுத்துறை குரே வீதியைச் சேர்ந்த மொஹமட் இர்பான் மொஹமட் இமாட் என்ற 21 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞன் தனது கையடக்கத் தொலைபேசி ஹாண்ட்-ஃப்ரீயை காதில் பொருத்திக் கொண்டு கட்டுகுருந்தவிலிருந்து களுத்துறை நோக்கி ரயில் பாதையில் நடந்துசென்றபோது, அளுத்கமையில் இருந்து மருதானை நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல தடவைகள் ஹோர்ன் ஒலித்தபோதும், சுற்றியிருந்தவர்கள் கூச்சலிட்டபோதும் அவர் ரயில் பாதையில் பயணித்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக ரயில் கட்டுப்பாட்டாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்ற...

செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். அத்து டன், இந்த வருடத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படமாட்டாது - என் றும் சொன்னார். (ஐ)

## ஐ.எஸ்...

பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கைதான சகோதரர்களில் ஒருவர் மீன்பிடி துறைமுகம் ஒன்றிலும் மற்றையவர் கொழும்பு கொள்கலன் முனையத்திலும் பணியாற்றுகின்றனர் என்று தெரிய வந்தது.

சகோதரர்கள் இருவரும் சிலாபத்தில் தமது தாயாரின் வீட்டில் தங்கியிருந்த சமயம் அங்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் இருவரையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் அண்மையில் ஐ. எஸ். அமைப்பை சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இலங்கையர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களுடன் நெருக்கமான ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை தொடர்ந்தே இந்த சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிவில்...

தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் எமது வேட்பாளருக்கு முழுமையாக வாக்களிக்க மக்களிடம் கோரலாம். அவர்கள் தேவையெனில், இரண்டாவது - மூன்றாவது வாக்கை வேறு ஒருவருக்கு வழங்குவதில் பிரச்னையில்லை. தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதுதான் முக்கியமானது. இதனால், உலகத்துக்கு எமது தனித்துவத்தை எடுத்துக் காட்ட முடியும்.

தமிழ் பொது வேட்பாளரை எம்மால் கொண்டு வரமுடியாத நிலைமை முன்னர் இருந்திருக்கலாம். இப்போது நாம் அவ்வாறு இல்லை. சிவில் சமூகத்தை சேர்த்துக்கொண்டு போவதால் பொது வேட்பாளரை நிறுத்த முடியும். இதை முரண்பாட்டுக்கு உரியதாக்கி பொது வெளியில் கொண்டுவருவது திசைதிருப்பும் முயற்சி.

புதியவர் ஒருவர் ஜனாதிபதியாக வந்தால் இப்போது எடுக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கை மாற்றமடையும். இந்த மாற்றம் நாட்டின் ஸ்திரத்தன்மையை பாதிக்கும். அவ்வாறு பாதித்தால் பொருளாதார முன்னேற்றம் தடைப்படும். இதனால் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைப்பதாக இருந்தால் அது நல்லது.

இதுவரையும் இருக்கும் ஒருவரை இன்னும் இரண்டு வருடங்கள் இருக்க விட்டால் என்ன பிரச்னை? மக்கள் மூலம் தெரிவானவர் அல்ல என்று தெரிந்து அவரை (ரணிலை) இதுவரை பதவியில் இருக்க விட்டுவைத்துவிட்டு, அவர் (ரணில்) ஊடாக நாட்டுக்கு நன்மையை பெற்றுவிட்டு இப்போது மக்களால் கொண்டுவரப்பட்டவர் அல்ல என்று கூறுவதில் அர்த்தமில்லை என்றும் அவர் கூறினார். (ஐ)

## சிகிச்சை...

புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதலில் படுகாயமடைந்திருந்தார். இந்தத் தாக்குதலில் இவரின் மகன் துலோத் அந்தோனி என்பவர் உயிரிழந்தார்.

முன்னதாக, உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் 8 இடங்களில் தற்கொலை தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதலில் 257 பேர் கொல்லப்பட்டனர். 500 இற்கும் மேற்பட்டோர் காயங்களுக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்...

தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது பெருந்தேசிய கட்சிகள்மீது மாத்திரமல்லாமல் வெளிநாட்டு சக்திகள் மீதும் பெரும் அழுத்தங்கள் செலுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், முஸ்லிம் தலைமைகள் மாத்திரம் வெட்கித் தலைகுனியக்கூடிய வகையில், வழமை போன்று குறுகிய இலாபத்துடன், எந்தப் பக்கம் பாயலாம் என்று பார்த்து கொண்டிருக்கின்றனர்.

கடந்த காலத்திலும் முஸ்லிம் தலைமைகள் இது போன்ற வரலாற்றுத் தவறையே விட்டிருந்தனர். எந்த பெருந்தேசிய தலைமையை ஆதரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை முஸ்லிம் கட்சித் தலைமைகள் வெளிப்படையாக அறிவித்து, அதற்கான காரணத்தை அறிவிக்க வேண்டும்- என்றும் அவர் கூறினார். (ஐ)

## இரண்டு...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டெழுகின்ற இந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் பல அபிவிருத்தி செயல்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. நாட்டின் கல்வித் துறை, பொது சேவைகள் என்பன சுமுகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டில் இவ்வாறான ஒரு ஸ்திரதன்மை ஏற்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதி தேர்தலோ அல்லது பொதுத் தேர்தலோ நாட்டின் தற்போதைய தேவை கிடையாது.

பாராளுமன்றில் அனைவரும் ஒன்றிணைந்து குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் இந்த யோசனைத் திட்டத்தை முன்வைக்கவேண்டும். இதேபோல் அநுரகுமார திஸநாயக்கா இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தை குறைந்தது இரண்டு வருடங்களுக்காவது நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல், பாராளுமன்ற தேர்தலையும் இரண்டு வருடங்களுக்கு பிற்போடுமாறு யோசனை முன்வைக்கின்றேன். கட்சி வேறுபாடின்றி அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாட்டைக் கடன் சுமையில் இருந்து விடுவிப்பதற்கும் நாட்டை பொருளாதார மீட்சிப் பாதைக்கு கொண்டு செல்வதற்கான இயலுமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே காணப்படுகின்றது - என்றார். (அ)

## தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில்...


கேள்வி - பொது வேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசு கட்சி ஏன் மௌனம் காக்கிறது?

பதில் - தமிழ் அரசுக் கட்சி மௌனம் காக்கவில்லை. நான் உட்பட பலர் வெளிப்படையாக பேசியிருக்கிறோம். எமது கட்சிக்குள் இரு நிலைப்பாடுகள் உள்ளன. மத்திய குழுவிலும் கலந்துரையாடியுள்ளோம் - முடிவு எட்டப்படவில்லை. இன்னும் தேர்தல் அறிவிக்கப்படவில்லை அறிவித்ததும் முடிவு எடுக்கப்படும்.

2002ஆம் ஆண்டு ஒஸ்லோவில் எடுக்கப்பட்ட சமஷ்டி முடிவை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆதரித்திருந்தார். அதனை தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவரும் ஏனைய வேட்பாளர்களும் முன்வைக்கட்டும். அதுவரை எமது இனத்துக்கு நடந்த அநீதிக்கு நீதியை வேண்டி தெளிவாக சொல்வதற்கு பொது வேட்பாளரை கொள்கைக்காக களம் இறக்க வேண்டும் - என்றார்.

முன்னதாக செய்தியாளர்கள் மத்தியில் அவர் தெரிவித்த கருத்தில், தமிழ்த் தேசிய இனம் தன் இலக்கு நோக்கிய பயணத்தில் இடர்களை எதிர்த்து முன்னேற வேண்டும் - என்று கூறினார். (ஐ)

# வல்வெட்டித்துறை மருத்துவமனைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி!



வடமராட்சி, மே 29

வல்வெட்டித்துறை பிரதேச மருத்துவமனைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்பட்டது. இதனை திறந்து வைக்கும் சம்பிரதாய நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மருத்துவமனையின் பொறுப்பதிகாரி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் நாடாவை வெட்டி திறந்து வைத்ததுடன் பெயர்ப்பலகையையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.

இந்த குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் 75 ஆயிரம் ரூபாய் செலவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கி வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கார்த்திகை பூ பொறிக்கப்பட்ட செருப்பை மீளப்பெற வேண்டும்!

### மன்னிப்பும் கோரவேண்டுமென ஐங்கரநேசன் வலியுறுத்து!

யாழ்ப்பாணம், மே 29

கார்த்திகைப் பூ வெறும் பூ அல்ல, தமிழ் மக்களின் வாழ்வியலிலும் உணர்வுகளிலும் தமிழ்த் தேசிய அரசியலிலும் இரண்டறக் கலந்துள்ள அவர்களின் உயிர்ப் பூ. இது தென்னிலங்கை நிறுவனமான டி .எஸ்.ஐ பாதணி உற்பத்தி நிறுவனத்துக்கு தெரியாததல்ல. ஆனாலும், தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டிப்பார்க்கும் விதத்தில் இந்த நிறுவனம் தனது இலேசுரக கால் செருப்புகளில் கார்த்திகைப்பூவைப் பொறித்து விற்பனைக்கு விட்டுள்ளது. இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. டி.எஸ்.ஐ நிறுவனம் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட கால் செருப்புகளை விற்பனையில் இருந்து மீளப்பெற வேண்டும். தமிழ் மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தியமைக்காக வருத்தமும் தெரிவிக்கவேண்டும் - என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ ஐங்கரநேசன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமை பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் புத்த பெருமானின் உருவத்தை உடலில் பச்சை குத்தியவர்களும், பௌத்த சின்னங்கள் அச்சிட்ட ஆடைகளை அணிந்தவர்களும் பௌத்தத்தை அவமதித்தனர் - பௌத்த மதத்தினரின் மனதை புண்படுத்தினரெனக் கூறி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள் .

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கார்த்திகைப் பூவும் புனிதமான ஒன்றாக - அவர்களின் தேசிய அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதனால், கார்த்திகைப் பூவைக் கால்செருப்பில் பொறித்திருப்பதைத் தங்களை இழிவுபடுத்தும் ஒன்றாகவே அவர்கள் கருதுகின்றார்கள். தமிழ் மக்களின் மன உணர்வைப் ப்புரிந்துகொண்டு டி .எஸ்.ஐ நிறுவனம் உடனடியாக இந்த கால் செருப்புகளை சந்தையில் இருந்து மீளப் பெறல்வேண்டும்.

டி. எஸ். ஐ. நிறுவனம் கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட கால் செருப்புகளை விற்பனையில் இருந்து மீளப்பெறும் வரைக்கும், இந்த அநாகரிக இழிசெயலுக்காக தமிழ் மக்களிடம் வருத்தம் தெரிவிக்கும் வரைக்கும் தமிழ் மக்கள் டி .எஸ்.ஐ நிறுவனத்தின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யாது புறக்கணிக்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## ஜனாதிபதி...

ஒத்திவைப்பது தொடர்பில் கருத்து வெளியிட்டமையை தொடர்ந்து நிமல் லான்சா இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 11 பாடசாலை...

என்றும் இந்தக் கொடுமையில் இருந்து தம்மை காக்குமாறும் கோரியே மாணவிகள் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர்.

ஊர்காவற்றுறையை சேர்ந்த பெண்கள் பாடசாலை ஒன்றின் மாணவிகளே இவ்வாறு தஞ்சமடைந்தனர். இவர்கள் 10 முதல் 17 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.

ஆங்கில உச்சரிப்பு தவறு, ஆங்கிலம் முறையாக பேசாதது, பிரார்த்தனையை முறையாக மனனம் செய்யாதது உள்ளிட்ட காரணங்களுக்காகவே விடுதிக்கு பொறுப்பான அருட்சகோதரி அகப்பை காம்பு, தடியால் தாக்கினார் என்றும் தலைமுடியை பிடித்து சுவருடன் மோதினார் எனவும் தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் மாணவிகள் கூறியுள்ளனர்.

கடந்த 3 வருடங்களாக தாம் இவ்வாறு துன்புறுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் மாணவிகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த மாணவிகள் 11 பேரும் யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் பரிசோதனைக்காக முற்படுத்தப்பட்டனர். அவர்களின் உடலில் அடித்ததால் ஏற்பட்ட தழும்புகள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேற்றைய தினம் விடுதிக்கு பொறுப்பான அருட்சகோதரி கைது செய்யப்பட்டார். அவர் இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மதுபான சாலை எமக்கு வேண்டாம் ஊர்காவற்றுறை மக்கள் போராட்டம்!



யாழ்ப்பாணம், மே 29

**ஊர்காவற்றுறையில் மதுபானசாலை அனுமதியை நிறுத்துமாறு கோரி நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

பிரபல்யமான பாடசாலைகள், ஆலயங்கள், தேவாலயங்கள் நீதிமன்றம், பொலிஸ் நிலையம் என்பவற்றுக்கு அண்மையாக மதுபானசாலை சட்டவிரோதமாக இயங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பல சமூக விரோத நடவடிக்கைகள் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நடைபெற்று நீதிமன்ற வழக்குகளாகவும் காணப்படுகின்றது.

இதனால் தீவக மக்களின் நலன் கருதி மதுபானசாலைக்கான அனுமதியை வழங்க கூடாது என தெரிவித்து இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

பதாகைகளை தாங்கியும், மதுபான சாலையை நிறுத்த கோரியும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மதுபான சாலையை நிறுத்தக் கோரி கையொப்பமும் பெறப்பட்டது., ஊர்காவற்றுறை சிவில் சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில், ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலகத்துக்குள் பதாகைகள் தாங்கியவாறு உள்நுழைந்து ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் சதீசன் மஞ்சுளாதேவியிடம் மகஜரையும் கையளித்தனர்.

# சாவகச்சேரி விபத்தில் நால்வர் படுகாயம்!



தென்மராட்சி, மே 29

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு அருகாமையில் ஏ - 9 வீதியில் கனரக வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதியதில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கனரக வாகனத்தின் பின்புறமாக (றிவேர்ஸ்) செல்ல முயன்றபோது பின்னால் வந்த முச்சக்கர வண்டி வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்கு உள்ளானது.

இதில், முச்சக்கரவண்டி சாரதியும் அதில் பயணித்த மூவருமாக நால்வர் படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமணம் செய்து 7 மாதங்களில் இளம் குடும்பப் பெண் கொலை!

## கணவன் மற்றும் இரு பெண்கள் கைது

முல்லைத்தீவு, மே. 29

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பூதன் வயல் கிராமத்தில் இளம் குடும்ப பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் மற்றும் இருபெண்கள் உள்ளிட்ட மூவரை முள்ளியவளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பூதன் வயல் கிராமத்தினை சேர்ந்த இளைஞனை வவுனியா ஆச்சிகுளம் பகுதியினை சேர்ந்த 23 வயதுடைய இளம் பெண் திருமணம் செய்து 7 மாதங்களாக வாழ்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில், கடந்த ஞாயிறு கிணற்றில் குறித்த பெண் விழுந்து இறந்துள்ளதாக முறைப்பாடு செய்வதற்காக கணவன் பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.


இதன்போது பொலிஸார் வருகை தர முன்னர் அயலவர்கள் கிணற்றில் விழுந்த பெண்ணை மீட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். இருப்பினும், பெண் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் நேற்று முன் தினம் சடலம் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது குறித்த பெண் கொலை செய்யப்பட்டுள்ளதான சந்தேகம் எழுந்துள்ளது.

இதனையடுத்து முள்ளியவளை பொலிஸாரால் உயிரிழந்த பெண்ணின் கணவர் மற்றும் கணவருடன் வாழ்ந்து வந்த நெடுங்கேணியினை சேர்ந்த இரண்டு பெண்கள் உள்ளிட்ட மூவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
08 - 06 - 1939

மறைவு
26 - 05 - 2024

## விநாயகமூர்த்தி நித்தியானந்தன்

**(Retired Draughtsman, Dept. of Irrigation, Sri Lanka)**

யாழ்ப்பாணம், அச்சுவேலியை பிறப்பிடமாகவும் அத்தியடி, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், தற்போது பிரித்தானியா New Malden Surrey வசிப்பிடமாகவும் கொண்ட திரு விநாயகமூர்த்தி நித்தியானந்தன கடந்த 26-05-2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி (Govt.Draughtsman) - பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும். சிவயோகேஸ்வரி (இராசாத்தி பிரித்தானியா) அவர்களின் அன்பு கணவரும், உமையாழினி(பிரித்தானியா), நிரஞ்சலிக்கா(நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகேந்திரன் (பிரித்தானியா), ஜெகதீஸ்வரன்(நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஐஸ்வர்யா(பிரித்தானியா), தர்ஷன் (பிரித்தானியா), ஜதிசியா(நோர்வே), சஞ்சிதா(நோர்வே) ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், காலஞ்சென்றவர்களான குகானந்தன் (Surveyor), வனஸ்பதி, மற்றும் குணபதி (பிரித்தானியா), சகுந்தலா, (கனடா) சர்வானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்றவர்களான ராஜநாதன், ஜெயரட்ணம், மற்றும் ஜெயவாணி (Srilanka) சற்குருநாதன் (பிரித்தானியா), நகுலா (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான Dr. சேனாதிராஜா, சிவபாக்கியம், சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், கனகலிங்கம், கமலாம்பிகை மற்றும், பற்குருநாதன், (அவுஸ்திரேலியா), பத்மாவதி, அவுஸ்திரேலியா வாமதேவன் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
**ஜெகன்** (நோர்வே)
**474 014 0357**

# இன்புளுவென்சா வைரஸ் நாட்டில் பரவும் அபாயம்!

கொழும்பு, மே. 29

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையுடன் இன்புளுவென்சா வைரஸ் பரவும் அபாயம் காணப்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார். இந்நாட்களில் இன்புளுவென்சா ஏ மற்றும் பி வைரஸ் தொற்றுகள் பதிவாகி வருகின்றது.

அதில் இன்புளுவென்சா ஏ தொற்றுக்குள்ளான சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

காய்ச்சலுடன் இருமல், சளி, தலைவலி, உடல்வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால், அது இன்புளுவென்சா காய்ச்சலாக இருக்கலாம்.

இதுபோன்ற அறிகுறிகள் இருந்தால், பிள்ளைகளை பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம் என பெற்றோர்களிடம் அவர் கேட்டுள்ளார்.

மேலும் குளிர் காலத்தில் இன்புளுவென்சா வைரஸ் பரவும் எனவும், வைரஸ் பரவாமல் தடுக்க முகக் கவசங்களை பயன்படுத்துவது மிகவும் அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்ப்ளுாயன்ஸா வைரஸுக்கு தடுப்பூசிகள் இல்லை எனவும் பரசிட்டமோல் மருந்தை செலுத்தி, தண்ணீர் மற்றும் இயற்கையான திரவங்களை எடுத்துக் கொண்டு ஓய்வு எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (அ)

# சிறுவனை கொலை செய்யப் போவதாக மிரட்டி குடும்பத்தை கட்டி வைத்து நகைகள் கொள்ளை!

## முல்லைத்தீவில் அதிகாலை பரபரப்பு சம்பவம்

முல்லைத்தீவு, மே. 29

முல்லைத்தீவு மாவட்டம், நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன் தினம் அதிகாலை வீட்டுக்குள் நுழைந்தவர்கள் கத்தி முனையில் நகைகளைக் கொள்ளையிட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நட்டாங்கண்டல் பகுதியில் உள்ள வீட்டுக்குள் நுழைந்த 5 பேர் கொண்ட குழு வீட்டில் இருந்தவர்களைக் கட்டி வைத்துவிட்டு மிரட்டியுள்ளனர்.

வீட்டின் ஜன்னலை உடைத்துக்கொண்டு உள்ளே சென்ற கொள்ளையர்களில் ஒருவர், வாசல் கதவைத் திறந்த பின்னர் மற்றையவர்கள் உள்நுழைந்ததாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

வீட்டு உரிமையாளரின் 14 வயது மகனைக் கொலை செய்யப் போவதாக மிரட்டிய கொள்ளையர்கள், அந்தச் சிறுவனின் தாய், தந்தையின் கண்களை மூடிக் கட்டிவிட்டு மகனை நகைகளை எடுத்துத் தருமாறு மிரட்டியுள்ளனர்.

கொள்ளையர்களில் ஒருவர் பொலிஸ் என அடையாளப்படுத்தப்பட்ட ரீ சேட் அணிந்து வந்திருந்தார் என்றும், வீட்டின் உரிமையாளரை விசாரிக்க வேண்டும் என்று தெரிவித்தே உள்நுழைந்தார் என்றும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையர்கள் களவாடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையர்களால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எடுத்துச் செல்லப்பட்ட போதிலும், ஒரு மோட்டார் சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org